விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 358 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 26 செவ்வாய்க்கிழமை (12.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வற் வரி சட்டமூலம்

### 57 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

வற் எனப்படும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் 57 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



## வற் வரி உயர்வடையவுள்ளதால் டீசல் 63 ரூபாயால் அதிகரிக்கும்

### விஜித ஹேரத் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 18 வீத வற் வரி நடைமுறைக்கு வந்ததும் டீசல் லீற்றரின் விலை 63 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் டீசல் தற்போது 346 ரூபாயாக விற்பனை செய்யப்படு 15


## புலிகளின் ஸ்ரிக்கர்

### மாத்தளையில் ஒருவர் கைது

(மாத்தளை)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் 15

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியள 15

# தமிழர்களை இலக்கு வைத்து பொலிஸ் பதிவு நடவடிக்கை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கண்டனம்



(கொழும்பு)

**கொழும்பின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்களை இலக்குவைத்து மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.**

கொழும்பில் தமிழர்கள் வாழும் பகுதிகளான கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, மோதரை ஆகிய பொலிஸ் பிரிவு 02

## மத ஸ்தலங்களை பதிவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

மதஸ்தலங்களை பதிவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், தரவு சேகரிப்பு தற்போது இடம் பெற்று வருவதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார 15

## சிற்றுண்டிகள் விலை உயர்வு

(கொழும்பு)

மீண்டும் உணவகங்களில் சிற்றுண்டி உள்ளிட்ட இதர உணவுகளின் விலையை உயர்த்த வேண்டும் என அகில இலங்கை உணவகம் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் 15

## அச்சுவேலியில் தனிமையில் சென்ற பெண்ணிடம் வழிப்பறி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பகுதியில் தனிமையில் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்கிவிட்டு நகைகளை கொள்ளையடித்து சென்றனர்.

அச்சுவேலி நாவற்காடு வீதியில் பாடசாலையொன்றுக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை மதியம் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

ஒரு பவுண் காப் 15

## இனப் பிரச்சினைக்கான தீர்வை எவ்வாறு நாம் பெற்றுக் கொள்வது?

### உலகத் தமிழர் பேரவை தமிழ் எம்.பிக்களுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

ஒன்றிணைந்த இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வை எவ்வாறு நாம் பெற்றுக் 15



## யாழ்ப்பாணத்துக்கு நதி ஒன்றை உருவாக்க அரசு திட்டம்

### அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி



(கொழும்பு)

வடக்கிற்கு நீர் வழங்குவதில் கவனம் செலுத்தி யாழ்ப்பாணத்திற்கு நதி ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக வனவிலங்கு மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு நீர்ப்பாசன 02

## ரணிலும் சஜித்தும் ஒருபோதும் இணைய மாட்டார்கள்

(கொழும்பு)

ஊடகங்கள் என்று கூறிக் கொள்ளும் பல அமைப்புகள் ஒன்றுசேர்ந்து ரணிலும் சஜித்தும் ஒன்றுசேர்வதாக பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன.

ரணிலும் சஜித்தும் ஒருபோதும் இணையமாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட் 15

நடுவு நிலை தவற[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண...

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்று பாராளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பாண நதி" என பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் முதற்கட்ட ஆய்வுகள் நெதர்லாந்து அரசினால் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த கட்டப் பணிகள் 2024 இல் ஆரம்பிக்கப்படும் என கூறியுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் வடக்கின் நீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நம்புவதாக பவித்ரா வன்னியாராச்சி மேலும் தெரிவித்தார்.

இதன்படி, முடங்கிக் கிடக்கும் யாழ்ப்பாணம் அணைக்கட்டுத்திட்டம் அடுத்த ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் கீழ் இத்திட்டத்தின் ஆரம்பகட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், 2024 ஆம் ஆண்டு மீண்டும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்குப் பகுதியைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஆறுகள் மற்றும் நீரோடைகளை அதிகபட்சமாகப் பயன்படுத்த முடிந்தது என்றும் அவர் கூறினார்.

கடந்த பருவத்தில் நீர்ப்பாசனத்துறை பெரிதும் வளர்ச்சியடைந்தது. நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இலங்கையில் 30,000 க்கும் மேற்பட்ட குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன அமைச்சின் சில திட்டங்களால் குறிப்பாக யானைகள் அதன் வாழ்விடங்களை இழந்துள்ளன. அந்த விலங்குகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றார். (ம-7)

# பெறுகை அறிவித்தல்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சபை நிதி - 2023

01) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் 12.12.2023 ஆம் திகதியிலிருந்து 24.12.2023 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை என்னும் முகவரியில் 12.12.2023 ஆம் திகதியிலிருந்து 24.12.2023 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 27.12.2023 ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே (27.12.2023 பி.ப 14.00) வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | எண்ணிக்கை (No of Set) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/CF/CCTV/26/2023 | Supplying & Installation of CCTV Camera System for Head Office of Pachchilaipalli Pradeshiya Sabha, Pallai | 01 | 10,000.00 | 13.03.2024 |
| | Supplying & Installation of CCTV Camera System for Mullipattu Sub Office at Iyakkachchi -Pallai | 01 | | |
| | Supplying & Installation of CCTV Camera System for Muhamalai Sub Office at Iththavil- Pallai | 01 | | |

தயானந்தன் தர்சினி
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

(C-7871)

## தமிழர்களை...

களில் தமிழர்களை இலக்குவைத்து மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அரசியலமைப்பை மீறி இந்த விண்ணப்பங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் மாத்திரமே வழங்கப்படுகின்றன. இதனை உடனடியாக நிறுத்துங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சபையில் நேற்று வெளிப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, உரையாற்றி எதிர்க்கட்சித் தலைவர் "இந்நடவடிக்கை தவறானது. ஆட்களை பதிவு செய்வதற்கென நடைமுறையொன்று உள்ளது. இந்த நடைமுறையினையே பயன்படுத்த வேண்டும்.

ஆனால் தமிழர்கள் மத்தியில் பொலிஸ் முறைமை பயன்படுத்தப்படுகிறது. இது அநீதி இழைக்கும் செயற்பாடு.

நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் போலவே குற்றங்களைக் குறைப்பதும் முக்கியம். ஒரு தரப்பினருக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் வெளிப்படைத் தன்மையும், ஜனநாயகமும் நிலைநாட்டப்பட வேண்டும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ம-7)


**தாதிய உதவியாளர் பதவிக்கான வெற்றிடம்**

தகைமைகள் :
1.தாதியர் கல்லூரி ஒன்றில் தாதிய டிப்ளோமாவை/ ஒரு வருட சான்றிதழை பூரணப்படுத்தி இருத்தல்.
2.முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

கவர்ச்சிகரமான சம்பளத்துடன், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியுடனான உரித்துடமை வழங்கப்படும்.

சுயவிபரக்கோவையை "தலைவர், தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பளை" என்னும் முகவரிக்கு 2023.12.20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு : 077 134 9963
tellicoophospital@gmail.com
(C-7877)

**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7873)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

**கனடாவில் வேலைவாய்ப்பு**
மற்றும்
TOURIST விசா
தேவைப்படுபவர்கள்
உடன் தொடர்பு கொள்ளவும்.

◆ 5-18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான Student விசாவும் பெற்றுத் தரப்படும்.
◆ பாதுகாவலர்களுக்கும் 10 வருட விசா பெற்றுத் தரப்படும்.

விண்ணப்பிக்க இன்றே அழையுங்கள்.
Hybrid international hub (pvt)ltd.
யாழ்ப்பாணம்
((வேம்படி மகளிர் கல்லூரி அருகில்))

தொடர்புகளுக்கு
077 815 5920, 076 250 0098,
021 222 1265
(C-7872)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை இலக்கு வைத்து தகவல் திரட்டும் பொலிஸார்

## மனோகணேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கொழும்பிலுள்ள தமிழ் மக்களை இலக்கு வைத்து, தகவல் சேகரித்து வரும் பொலிஸார் அரசியலமைப்பை மீறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.**



இந்த தகவல்களை கோருவதற்கு அவர்கள் சிங்கள மொழியிலான விண்ணப்பங்களை மாத்திரமே வழங்குவதாகவும் இந்த தகவல் சேகரிப்பினால் மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் நேற்று இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது தெரிவித்தார்.

பொலிஸார் கட்டளைச் சட்டத்துக்கமைய இந்த தகவல்கள் கோரப்படுகின்றன. தமிழ் ஓர் அரச கரும மொழியாக உள்ள போதிலும் சிங்களத்தில் மாத்திரம் தகவல் கோரப்படுவதால், அரசியலமைப்பு மீறப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு கருதியே இத்தகைய தகவல்கள் சேகரிக்கப்படுவதாகவும் இதில் தமிழ் மக்கள் மாத்திரம் இலக்கு வைக்கப்படுவதாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சிங்கள மொழியிலான விண்ணப்பங்கள் மாத்திரம் வழங்கப்படுவதாக கூறப்படும் விடயம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (5-6)

## மண்மேடு சரிந்ததில் மேலும் ஒருவர் பலி



(கொழும்பு)

காலி - கராபிட்டிய பகுதியில் கட்டுமான தளமொன்றுக்கு அருகில் ஏற்பட்ட அனர்த்தத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த சனிக்கிழமை காலி - கராபிட்டிய பகுதியில் கட்டுமான தளமொன்றுக்கு அருகில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்த நிலையில் ஏனைய 3 பேர் கராபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்த நிலையில், குறித்த சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த மூவரில் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். (5-6)

## நுரைச்சோலை மின் பிறப்பாக்கி திருத்தப்பட்டது

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் திருத்தப்பணிகளின் பின்னர் நேற்று தேசியமின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த அனல்மின் நிலையத்தின் மூன்று மின் பிறப்பாக்கிகளில் இரண்டு செயலிழந்த நிலையில் இருந்ததால் பழுது நீக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன.

செயலிழந்த நிலையில் இருந்த நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் பழுது நீக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (5-6)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 22 லட்சத்து 80,000 ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கம்பளை - புஸ்ஸல் லாவை பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய வர்த்தகர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

## நாட்டை வந்தடைந்த 2 சொகுசு பயணிகள் கப்பல்



(கொழும்பு)

இரண்டு சொகுசு ரக பயணிகள் கப்பல்கள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

குறித்த இரண்டு கப்பல்களும் கொழும்பு துறைமுகத்தில், நங்கூரமிட்டுள்ளதாக துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

366 பயணிகளுடனும் 489 பணி குழாமினருடனும் வாஸ்கொடகாமா என்ற முதலாவது சொகுசு ரக சுற்றுலாப்பயணிகள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அதேநேரம் எம்.எஸ் மயின் ஷிஃப் 5 என்ற இரண்டாவது சொகுசு ரக சுற்றுலாப் பயணிகள் கப்பல் 2365 சுற்றுலா பயணிகளுடனும் 967 அடங்கிய பணி குழாமினரும் நாட்டை வந்தடைந்துள்ளனர். (5-6)

## கனடா செல்ல முற்பட்ட இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடா செல்ல முற்பட்ட இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதானவர் யாழ். பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரென தெரியவந்துள்ளது. (5-6)

## மின்தடை காரணமாக 600 கோடி ரூபாய் இழப்பு



(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட 5 மணித்தியால மின் தடை காரணமாக 600 கோடி ரூபாய்க்கும் அதிகமான நேரடி பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கு மின் சக்தி அமைச்சரும் செயலாளரும் நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொத்மலை மற்றும் பியகமவுக்கு இடையிலான மின் பரிமாற்ற கட்டமைப்பு மின்னல் தாக்கத்துக்கு உள்ளானதன் காரணமாகவே நாடு முழுவதும் கடந்த சனிக்கிழமை மின்சார விநியோக தடை ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (5-6)

## அதிகரிக்கும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் இலங்கையில் நேற்று முன்தினம் வரை 80,192 டெங்கு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


அதேவேளை இலங்கையில் இந்த ஆண்டு இதுவரை பதிவான மொத்த் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80,000 ஐ தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 46.4 வீதமான தொற்றுக்கள் பதிவாகியுள்ள நிலையில், குறிப்பாக மேல் மாகாணம் மிகவும் பாதிக்கப்பட்ட மாகாணமாக காணப்படுகின்றது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# பங்களாதேஷ், நியூசிலாந்து டெஸ்ட் போட்டி சமநிலை



சமநிலையில் முடிந்த நியூசிலாந்து, பங்களா டெஸ் தொடர். பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி டாக்காவில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய பங்களாதேஷ் 172 ரன்னில் சுருண்டது. அதிகபட்சமாக முஷ்பிகுர்ரஹிம் 35 ரன்கள் எடுத்தார்.

நியூசிலாந்து சார்பில் சான்ட்னெர், கிளென் பிலிப்ஸ் தலா 3 விக்கெட்டும் அஜாஸ் பட்டேல் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 180 ரன்களுக்கு ஓல் அவுட் டானது. கிளென் பிலிப்ஸ் அதிரடியாக ஆடி 87 ரன்கள் எடுத்தார். 8 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை பட்டிங் செய்த பங்களாதேஷ் 144 ரன்கள் எடுத்து ஓல்அவுட் ஆனது இதையடுத்து, நியூசிலாந்து அணிக்கு 137 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக் கப்பட்டது.

இந்நிலையில், நியூசிலாந்து அணி இரண்டா வது இன்னிங்சை தொடங்கியது. சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன. ஒருகட்டத்தில் 69 ரன்களுக்கு 6 விக்கெ ட்டுகளை இழந்து நியூசிலாந்து தத்தளித்தது. 7 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த கிளென் பிலிப்ஸ், மிட்செல் சாண்ட்னர் ஜோடி பொறு ப்புடன் ஆடி அணியை வெற்றிப்பாதைக்கு அழை த்துச் சென்றது.

இறுதியில் நியூசிலாந்து 6 விக்கெட்டுக்கு 139 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற் றது. இதன்மூலம் டெஸ்ட் தொடர் 1-1 எனும் சம னில் முடிந்தது. (5-6)

# ஐ.பி.எல் ஏலத்தை குறி வைக்கும் பீட்டர்சன்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான கெவின் பீட்டர்சன், ஐ.பி.எல் ஏலத்தில் எப்படி பங்கு பெறுவது என்று கேட்டுள்ளார்.

அண்மையில் நடந்த போட்டியில், மணிப்பால் டைகர்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா கேபிடல்ஸ் அணியை வீழ்த்தியது.

முதலில் துடுப்பாடிய இந்தியா கேபிடல்ஸ் 177 ஓட்டங்கள் குவித்தது. சிக்சர் மழை (5) பொழிந்த இங்கிலாந்தின் கெவின் பீட்டர்சன் 27 பந்து களில் 56 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் ஆடிய மணிப்பால் டைகர்ஸ் அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டு 181 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த நிலையில் தனது ஆட்டம் குறித்த வீடியோவை கெவின் பீட்டர்சன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் இரவு என தனது ஆட்டத்தினை குறிப்பிட்ட அவர், ஐ.பி.எல் ஏலத்தில் எப்படி நான் நுழைவது? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது இந்த பதிவுக்கு ரசிகர்கள் பலரும் பதில் அளித்து வருகின்றனர். தற்போது இந்த வீடியோ இணையத்தில் வேகமாக பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# ஒருநாள் தொடரை கைப்பற்றியது வெஸ்ட் இண்டீஸ்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் 5 போட்டி கள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடி வரு கிறது.

முதல் ஒருநாள் போட்டி யில் வெஸ்ட் இண்டீஸ் அணியும், 2 ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியும் வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி பிரிட்ஜ் டவுனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பவுலிங் தேர்வு செய்தது. மழை காரணமாக போட்டி 40 ஓவராகக் குறைக்கப் பட்டது.

அதன்படி, முதலில் ஆடிய இங் கிலாந்து 9 விக்கெட் இழப்புக்கு 206 ரன்கள் எடுத்தது.

பென் டெக்கெட் பொறுப் புடன் ஆடி அரைச் சத மடித்தார். அவர் 71 ரன்னில் அவுட்டா னார். லிவிங்ஸ் டோன் 45 ரன்னில் வெளியேறினார்.

இதையடுத்து 207 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் களமி றங்கியது.

மீண்டும் மழை குறுக்கிட்டதால் டி.ஆர்.எஸ் முறைப்படி 34 ஓவரில் 188 ரன்கள் எடுக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட் டது.

அந்த அணியின் கெய்சி கார்டி சிறப்பாக ஆடி அரை சதமடித்து ஆட்டமிழந்தார். தொடக்க ஆட்டக்காரர் ஆலிக் அதான்சே 45 ரன்னில் அவுட்டானார்.

கடைசி கட்டத்தில் ரொமாரியோ ஷெப்பர்டு அதிரடியாக ஆடி 28 பந்தில் 43 ரன்கள் எடுத்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் 31.4 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 191 ரன்கள் வெற்றி பெற்றது. அத்துடன் ஒருநாள் தொடரை 2-1 என கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக மேத்யூ போர்டேவும், தொடர் நாயகனாக ஷாய் ஹோப் பும் தேர்வாகினர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலின் போது சிங்கள வாக்குகள் பிளவடையும்

## திகாம்பரம் எம்.பி

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது சிங்கள வாக்குகள் மூன்றாக பிளவடையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.**

சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாக பிளவடையும்காரணத்தினால் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவுடன் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக தெரிவாகுவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி ரணில் கூறியுள்ளதாகவும் அதனையே மக்களும் விரும்புகின்றனர்.

மொட்டு கட்சியின் ஆதரவினைக் கொண்டு ரணிலால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என தெரிவித்தார். (5-6)



# மாணவர்களிடையே போதைப்பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பாடசாலை மாணவிகள் மத்தியில் போதை மாத்திரை பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் படி, அநுராதபுரத்தில் உள்ள மருந்தகம் ஒன்றில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.

குறித்த மருந்தகத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் பாடசாலை மாணவிகள் மத்தியில் போதை மாத்திரை பாவனை அதிகரித்துள்ளதாக இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (5-6)


# கறுப்பு சால்வை அணிந்து பாராளுமன்றுக்கு வந்த எம்.பி

(கொழும்பு)

மீனவர்களின் துயரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துலிப் வெத ஆராய்ச்சி நேற்று பாராளுமன்றுக்கு கறுப்பு சால்வை அணிந்து வந்திருந்தார்.

கடற்றொழில் அமைச்சு மீதான பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர்,

தற்போது சுமார் 3000 படகுகள் மீன்பிடி நடவடிக்கைக்காக கடலுக்குச் செல்லாமல் கரையில் உள்ளதாகவும் வற்வரி அதிகரிப்பினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (5-6)



# மூவாயிரத்திற்கும் அதிகமான கையூட்டு முறைப்பாடுகள் பதிவு

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு

(கொழும்பு)

இந்த வருடம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதி யில் 3,000 இற்கும் அதிகமான இலஞ்ச முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 21ஆம் திகதி வரை 3,255 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றுள் கணிசமான எண்ணிக் கையானது அரச ஊழியர் கள் தொடர்பில் பெறப்பட்ட முறைப்பாடுகளாகும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக சுமார் 100 முறைப்பாடுகளும் அதிபர்களுக்கு எதிராக சுமார் 50 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற இலஞ்ச முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில், விசாரணைப் பணிகளைத் தொடர்வதற்கு ஆணைக்குழுவில் உள்ள வெற்றிடங்களை விரைவாக நிரப்ப வேண்டிய தேவை இருப்பதாகவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (5-6)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. துரைராஜா முகுந்தன் அவர்களின்
பாசமிகு மாமியார்

அமரர். திருமதி.
**சாந்திகுமார் சிவஞானதேவி**



அவர்கள் 09.12.2023 அன்று காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8201)

**ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**


# இராசிபலன்

12.12.2023
கார்த்திகை 26, செவ்வாய்க்கிழமை
சதுர்த்-தசி காலை 6.27 மணிவரை
அமாவாசை பின்னிரவு 5.46 மணிவரை

அனுசம் பிற்பகல் 12.27 மணிவரை
சுபநேரம் -10.50-12.20 மணிவரை
இராகுகாலம்-3.20-4.50 மணிவரை
அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்-
பரணி, கார்த்திகை.

**வளவன்**



மேஷம்

எதிர்பாராத வகையில் சில குழப்பங்கள் தோன்றி மறையும், வார்த்தைகளில் நிதானம் தேவை, வேலைச் சுமை கூடும், உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.



ரிஷபம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



மிதுனம்

காலைநேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.



கடகம்

மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.



சிம்மம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.



கன்னி

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாடு முன்னேற்றம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



துலாம்

புத்திசாதூரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வநது சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.



விருச்சிகம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும், எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



தனுசு

இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, மனச் சஞ்சலங்கள் சற்று கூடும்.



மகரம்

வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், திடீர் பணவரவால் சந்தோசமடைவீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



கும்பம்

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.



மீனம்

எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், இழுபறியாக இருந்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**உன் இதயத்தை ஒருபோதும் செல்வத்தின் மீது சாய்ந்திருக்க விடாதே.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

2022(2023) க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 1 ஆம் தடவை மற்றும் 2 ஆம் தடவை தோற்றி க.பொ.த உயர்தரத்தை தொடரும் வாய்ப்பை இழந்த மாணவர்கள் 13 வருட உத்தரவாத கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிற்கல்வியை யாழ்/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் தொடர்வதற்கான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிரபிக் வடிவமைப்பு, நீரியில் வள தொழில்நுட்பம், பிரயோக தோட்டக்கலை, தையல்பயிற்சி நெறி, குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு, சுற்றுலா விருந்தோம்பல், சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு, மின் தொழில் நுட்பவியலாளர், கலை மற்றும் வடிவமைப்பு, கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு ஆகிய கற்கை நெறிகள் கோரப்பட்டுள்ளன.

அந்த வகையில் 2024 இற்கான மாணவர் அனுமதி நேற்று முதல் பாடசாலையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யா/ முத்துத்தம்பி ம.வி அதிபர் அறிவித்துள்ளார். (5-6)

---

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை மகளிர் விவகார அமைச்சினால் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பெண் சாதனையாளர்களை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகளிலிருந்து மேற்படி தெரிவு அடிப்படையில் சாதனையாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

திறந்த போட்டிகளாக நடைபெறும் இப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. 04 புளூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின் அஞ்சல் : npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல: 021 222 0883 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாணசபையின் இணையத்தளத்தினை பார்வையிட முடியும் என வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)

---

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (2024) வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு "பெண்களின் பொருளாதார வலுவூட்டலானது பாலின சமத்துவ உலகின் மையமாகும்- வருமானமீட்டுவதற்கும் கற்றுக் கொள்வதற்கும் வழி நடத்துவதற்கும் பெண்களுக்கு சம வாய்ப்புகள் அளிக்கப்படும் போது ஒட்டு மொத்த சமூகமும் செழிக்கும்" எனும் கருப்பொருளில் குறும்படத்திற்கான திரைக் கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

திறந்த போட்டிகளாக நடைபெறும் இப்போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா.இல. 04, புளூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின் அஞ்சல்: npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல: 021 222 0883 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் மேலதிக விபரங்களுக்கு https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாணசபையின் இணையத் தளத்தினை பார்வையிட முடியும் என வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)

---

# மனித உரிமை மீறல்களுக்கு எதிராக யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழில் நேற்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட மாகாண பெண்கள் குரல் அமைப்பினரால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**



இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில் வடபகுதியில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணி அபகரிப்பு, இராணுவ சோதனை தடுப்பு அரண்கள், மக்கள் மீள்குடியேற்றப்படாமை, தற்காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு, பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரம், போதைப் பொருள் பாவனை, சமுர்த்தி கொடுப்பனவுகள் சரியான முறையில் கிடைக்கப்பெறாமை போன்ற சவால்களையும் மக்களாகிய நாம் எதிர்நோக்குவதுடன் நாட்டின் பொருளாதார கொள்கை, நாட்டின் புதிய சட்ட மற்றும் சட்ட மூலங்கள் சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் வட பகுதி மக்களாகிய நாம் பல இன்னல்களை எதிர் நோக்குகின்றோம்.

குறித்த பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5-6-33)

---

# விவசாயிகளுக்கான மின் கட்டண அறவீட்டில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்



(சாவகச்சேரி)

விவசாயிகளுக்கான மின் கட்டண அறவீட்டில் திருத்தத்தை மேற்கொண்டு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், மனித உடலில் குருதி மற்றும் இதயம் ஆகியன எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு ஒரு நாட்டிற்கு விவசாயத்துறை முக்கியமானது.

விவசாயிகளுடைய உழைப்பில் தான் இந்த நாடு ஸ்திரமடைந்துள்ளது. விவசாயிகளுக்கு மிக அதிகரித்த மின் கட்டணம் அறவிடப்படுகிறது. ஆனால் ஏனைய துறைகளுக்கு அவ்வாறான அதிகரித்த மின் கட்டண அறவீடு இல்லை. எந்தத்துறை நாட்டைக் காப்பாற்றுகிறது என்று சிந்திக்க வேண்டும் என தெரிவித்தார். (5-6-30)



யாழ்.செய்திகள்

---

# மாவா போதைப்பொருளுடன் நபரொருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் பெருமளவான மாவா போதைப் பொருளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். பெருமாள் கோயிலடியில் உள்ள தனியார் கல்வி நிறுவன மொன்றின் அருகிலே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது 3 கிலோ 686 கிராம் நிறை கொண்ட மாவா போதைப்பொருள் சிறிய சிறிய பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இல க்காகக் கொண்டு குறித்த சந்தேகநபர் போதைப்பாக்கு விற்பனையில் ஈடுபட்ட போது யாழ். மாவட்ட பொலிஸ் புல னாய்வு பிரிவினரால் கைது செய்து யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (5-6-33)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
# பொது அறிவித்தல்-2024

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

1. **ஆதன வரி செலுத்துதல்**
2024ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை), மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்), பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் உரிய காலங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கவும்.
மேலும் **ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர்** ஆண்டுக்கான வரி முழுவதும் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் **10% கழிவு** வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் **5% கழிவு** வழங்கப்படும்.

2. **ஆதனப் பெயர்மாற்றம் செய்தல்**
சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடைமையினைக் கொண்டு, ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளவும்.

3. **காணி உப பிரிவிடுதல் / ஒருங்கிணைத்தல்**
பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போதும் ஆதனங்களை ஒன்றாக்கும் போதும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை / ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளவும்.

4. **கட்டட அனுமதி வழங்கல்**
(1) பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.
(2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.
(3) அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக சபை உப அலுவலகத்திற்கு ஊடாக விண்ணப்பித்து குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
(4) சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

5. **வீதி ஒழுங்கைப்பேணல்**
பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள் மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

6. **வியாபார அனுமதி / வியாபார வரி - 2024**
இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், முச்சக்கர வண்டித்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் தொழிற்சாலைகள் மற்றும் சேவை வழங்குநர்கள் 2024ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான / வியாபார வரி செலுத்துவதற்கான விண்ணப்பப்படிவத்தை **2024ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள்** பெற்று அதனைப் பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை **31.03.2024ஆம்** திகதிக்குள் செலுத்தி 2024ஆம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தை / வரிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. **இறைச்சி வகைகள், மரக்கறிகள் விற்பனை**
எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டார தூரத்திற்குள் இறைச்சி வகைகள், மரக்கறிகள் என்பன விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

8. **துவிச்சக்கரவண்டி மற்றும் மிருக வரி**
2024ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களுக்கான வரியை **மார்ச் 31ஆம்** திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

9. **சூழல் பாதுகாப்பு உரிமம்**
மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தின் திட்டமிடல் கிளையில் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

10. **படவரைஞர்களைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல்**
2024ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் **2023ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம்** திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு/ புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்களும் புதிதாக பதிவு செய்பவர்களும் படவரைஞருக்கான **குறைந்தபட்சம் NVQ Level 5 இன் தொழில்நுட்ப (கட்டடம்) வரைபிற்கான - Drafting Technology (Building) சான்றிதழ்** சமர்ப்பிக்க வேண்டும். பதிவுகளை புதுப்பிக்காத படவரைஞர்களால் வரையப்படும் வரைபடங்கள் **2024.01.01 இற்கு பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.** இப்பதிவிற்கான விண்ணப்பப்படிவங்களை எமது சபை உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் சபை உப அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ள முடியும்.

11. **விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை **31.01.2024ஆம் திகதிக்கு முன்** செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து **01.02.2024ஆம் திகதிக்கு பின்** அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **திண்மக் கழிவுகளை அகற்றுதல்**
வீடுகள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது நாளாந்த சமையல் கழிவுகளை உரிய வகையில் தரம் பிரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு கழிவகற்றல் நேர அட்டவணைக்கு அமைவாக வழங்கி சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். மேலதிகமான கழிவுப் பொருட்களைத் தரம் பிரித்து, பிரதேச சபை தலைமை அலுவலகம் உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு உரிய கட்டணங்களைச் செலுத்தி அவற்றினை அகற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

13. **நீர்வழங்கல் சேவை**
பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் எமது உரிய கட்டணத்தை செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

14. **கனரக வாகன சேவை**
திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (Gully Bowser) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
வீதி உருளை, பக்கோ லோடர், டிப்பர் என்பன வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

15. **கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம்**
பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

16. **பொதுப்பயன்பாட்டு சேவைகள்**
சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் வழங்கி வருகின்றன. எனவே அச் சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடைய முடியும்.

17. **மயானங்கள்**
பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சபைக்குரிய சுடுகாடுகளில்/ இடுகாடுகளில் பூதவுடலினை தகனம் / நல்லடக்கம் செய்வதற்காக உரிய கட்டணத்தினை எமது உப அலுவலங்களில் செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளவும்.

இவ் அறிவித்தல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள் என்பவற்றை எமது உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

சீ.சபேசன்.,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
2023.12.12


தொலைபேசி இலக்கங்கள் :

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | - | 021 225 6647 |
| மானிப்பாய் பட்டினம் | - | 021 225 5382 |
| மானிப்பாய் கிராமம் | - | 021 225 5379 |
| பண்டத்தரிப்பு பட்டினம் | - | 021 225 2021 |
| பண்டத்தரிப்பு கிராமம் | - | 021 225 2022 |


(சி-7874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### பங்களாதேஷில்
# தீயணைப்புப் படைக்கு பெண்கள் நியமனம்




(டாக்கா)
பங்களாதேஷில் தீயணைப்பு படைக்காக முதல் முறையாக பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாலின பாகுபாடிற்கு எதிரான முயற்சியாக தீயணைப்புப் படை வீராங்கனைகள் நியமிக்கப்படுவதாக பங்களாதேஷ் அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய பங்களாதேஷின் உள்துறை அமைச்சர் அசாதுஸ்மன் கான் கமல், தலைநகர் டாக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 15 வீராங்கனைகள் தீயணைப்புப் படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். உடற்தகுதி, மருத்துவ பரிசோதனை, எழுத்துத் தேர்வு மூலம் 2,707 பேர் தீயணைப்புப் படை வீராங் கனைகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவற்றில் முதல் கட்டமாக 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையில் இதற்கு முன்பு பெண்கள் பணிபுரிந்திருப்பினும், தீயணைப்புப் படை வீராங்கனைகளாக பெண்கள் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். (நி-5)

# இஸ்ரேலுக்
# ஆயுதப் பன
## -ஹவுதி அமைப்பு

(சனா)
**நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படும் வ... களுக்கு செல்லும் அனைத்து கப்பல்... என்பதை பொருட்படுத்தாமல் குறிவைக்... அமைப்பு பகிரங்க எச்சரிக்கை விடுத்து...**



# பிரித்தானியாவில் நுளம்பால் நோய் பரவும் அபாயம்
## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(லண்டன்)
2040 மற்றும் 50களில் டெங்கு காய்ச்சல் சிக்குன்குனியா மற்றும் ஜிகா வைரஸை பரப்பும் திறன் கொண்ட நுளம்புகளின் இருப்பிடமாக பிரித்தானியாவின் சில பகுதிகள் மாறக்கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பிரித் தானியாவில் பாதிக்கப்பட்ட முதல் நாடாக இங்கிலாந்து இருக்கும். வேல்ஸ், வடக்கு அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லந்தின் சில பகுதிகளும் பாதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பம் தொடர்பான இறப்புகளின் அதிகரிப்பு மற்றும் வெள்ளத்தால் ஏற்படக்கூடியதாக்கங்களும் இதில் அடங்கும் என்றும் ஆனால் விரைவான நடவடிக்கை மூலம் சிக்கல்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கான சர்வதேச நாடுகள் அதன் கடமைகளை சரியாக செய்யவில்லை என்றால் அது மோசமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றும் பிரித்தானிய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5-6)

# சிங்கப்பூரில் கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பு



(பீஜிங்)
சிங்கப்பூரில் கொவிட் தொற்று வேகமாக பரவி வருவதாகவும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு வருவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் கடந்த 2019ஆம் ஆண்டு சீனாவின் வூகானில் பரவிய கொரோனா தொற்று உலக நாடுகள் முழுதும் பரவி பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

மேலும்தற்போது கொரோனா தாக்கம்பெருமளவுகுறைந்துள்ள நிலையில், சிங்கப்பூரில் கடந்த ஒரு வாரத்தில் 32 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொற்று அறிகுறியுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருவதாக வருவதாக தகவல் வெளி யாகியுள்ளது.

அந்நாட்டு சுகாதார அமைச்சகம் பிறப்பித்துள்ள உத்தரவில், பொதுமக்கள் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளை கடைபிடிக்கும்படி அறிவுறுத்தி உள்ளது. (5-6)

# காசாவில் கான்யூனிஸ் நகரில் இஸ்ரேல் கடுமையான தாக்குதல்



(காசா)
தென்காசாவின் முக்கிய நகரான கான்யூனிஸ் நகரில் இஸ்ரேலியப் படையினர் மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நகரம் வான்வெளி புகை மூட்டத்தால் நிரம்பியிருக்கிறது. காசாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானோர் அங்கேதான் தஞ்சமடைந்துள்ளனர்.

ஏற்கனவே மோசமான நிலையில் உள்ள நாசர் மருத்துவமனைக்குத் தொடர்ந்து பெருமளவு மக்கள் சிகிச்சைக்காக நாடிச் செல்கின்றனர்.

அங்கு 1,000 பேருக்கு மட்டுமே சிகிச்சையளிக்க வசதி உள்ளது. ஆனால் தற்போது அங்கு சுமார் 3,500 பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

போரில் சுமார் 18,000 பாலஸ்தீனர்கள் மாண்டு விட்டதாகக் காசாவின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கு பயணிக்கும் கப்பல்கள்

# படைகளுக்கு இலக்காகும்

## மப்பு எச்சரிக்கை—

**டும் வரையில் இஸ்ரேலிய துறைமுகங் கப்பல்களையும் எந்த நாட்டவர்கள் றிவைக்க இருப்பதாக ஏமனின் ஹவுதி விடுத்துள்ளது.**



சமீப நாட்களில் செங்கடல் மற்றும் அதன் பாப் அல்-மண்டப ஜலசந்தியில் இஸ்ரேலுடன் தொடர்புடைய பல கப்பல்களை ஹவுதி அமைப்பு தாக்கி கைப்பற்றியுள்ளது. குறித்த வழித்தடமானது உலகின் பெரும்பாலான எண்ணெய் ஏற்றுமதி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தான் தங்களின் நடவடிக்கைகள் இருப்பதாக ஹவுதி தரப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், கப்பல்கள் மீதான தாக்குதலானது



ஈரான் முன்னெடுக்கும் பயங்கரவாதம் என குறிப்பிட்டுள்ள இஸ்ரேல், சர்வதேச கடல் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் எனவும் தெரிவித்துள்ளது.

ஹவுதி தரப்பு தெரிவிக்கையில், நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படும் வரையில் இஸ்ரேலிய துறைமுகங்களுக்கு செல்லும் அனைத்து கப்பல்களும் செங்கடல் மற்றும் அரபிக் கடலில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளது என அறிவித்துள்ளது.

மேலும், காசா மக்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துகள் கிடைக்கவில்லை என்றால் செங்கடல் ஊடாக இஸ்ரேலிய துறைமுகங்களுக்குச் செல்லும் அனைத்து கப்பல்களும் எந்த நாட்டினராக இருந்தாலும், தங்களது ஆயுதப் படைகளுக்கு இலக்காகிவிடும் என ஹவுதி தரப்பு அறிக்கை ஒன்றில் வெளியிட்டுள்ளது.

அத்துடன், தங்களின் இந்த முடிவு உடனடியாக அமுலுக்கு கொண்டுவந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகளை இலக்கு வைத்துள்ள பல்வேறு குழுக்களில் ஹவுதி அமைப்பும் ஒன்றாகும்.

சமீபத்தில் சர்வதேச கடல் பகுதியில் மூன்று வணிக கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகின.

ஏமன் மற்றும் அதன் செங்கடல் கடற்கரையின் பெரும்பகுதியை ஆளும் ஹவுதிகள் இஸ்ரேலிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்த பிரித்தானியாவுக்குச் சொந்தமான சரக்குக் கப்பலையும் கடந்த மாதம் கைப்பற்றினர்.

இதனையடுத்து அமெரிக்காவும் பிரித்தானியாவும் கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களை கண்டித்துள்ளதோடு ஹவுதி களுக்கு ஆதரவளிப்பதில் ஈரானின் பங்கையும் குற்றம் சாட்டின.

இந்த நிலையில் கப்பல்கள் மீதான தாக்குதல் விவகாரத்தில் அமெரிக்கா நிதானம் காட்ட வேண்டும் என்று சவுதி அரேபியா கேட்டுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (5-6)

## ரில்
## தல்

க்கானோர்
தஞ்சமடைர்

மோசமான
ள்ள நாசர்
க்குத் தொட
வு மக்கள்
நாடிச் செல்

0 பேருக்கு
சையளிக்க
ஆனால் தர்
மார் 3,50C
றுகின்றனர்.
ளர் 18,00C
ள் மாண்டு
காசாவின்
ரிகள் தெரி
(5-6)

## இரண்டு ஏவுகணைகளை சுட்டு வீழ்த்திய பிரான்ஸ்

(பாரிஸ்)

பிரான்ஸின் போர்க்கப்பல்களை நோக்கி வந்த இரண்டு ஏவுகணைகளை செங்கடல் பகுதியில் சுட்டு வீழ்த்தியுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஏமனின் கரையோரப்பகுதியிலிருந்து வந்த ஏவுகணைகளையே சுட்டு வீழ்த்தியுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

செங்கடல் பகுதியில் இயங்கும் லங்குயுடொக் என்ற போர்க்கப்பல் கடந்த சனிக்கிழமை இரவு இந்த ஏவுகணைகளை சுட்டுவீழ்த்தியுள்ளது.

ஏமனின் கரையோரத்திலிருந்து 110 கிலோமீற்றர் தொலைவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (5-6)



## 20 நாடுகள் விசா இல்லாமல் இந்தோனேசியா நுழைய அனுமதி

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் சுற்றுலாத்துறை அமைச்சகம் 20 நாடுகளுக்கு விசா இல்லாமல் தங்கள் நாட்டிற்குள் நுழைய அனுமதி வழங்க முன்மொழிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்நிலையில், அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா, தென்கொரியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட 20 நாடுகளுக்கு இந்தோனேசியாவிற்குள் நுழைய விசா அற்ற அனுமதி வழங்க முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை அந்நாட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் சாண்டியாகோ ஊனோ தெரியப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், "சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் உள்நாட்டு நுகர்வை அதிகரிக்க முடியும், 'இதன் மூலம் பெரிய முதலீட்டாளர்கள் ஈர்க்கப்படுவார்கள், அதிக நாள் தங்கும் நோக்கில் வருபவர்களே எங்களது இலக்கு" எனக் தெரிவித்துள்ளார். (ரி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு ரூ.1.5 பில்லியன் ஒதுக்கீடு



(கொழும்பு)

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்காக அடுத்த ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதனூடாக இலங்கையில் முதன்முறையாக A.I தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்காக அடுத்த ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மேலும் 8 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தளவு நிதி ஒதுக்கப்பட்டதில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (5-6)

# பயணப் பொதிகளை அடையாளம் காண்பதற்கு‘டாக்’ குறிச்சொற்கள்

(கொழும்பு)

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேறும் பயணிகளுக்கு தங்களது பயணப்பொதிகளை இலகுவாக அடையாளம் காண “டாக்” குறிச்சொற்கள் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் சோதனையிட ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சில விமானப் பயணிகள் தங்களது பயணப்பொதிகளுக்கு மாறாக வேறொரு பயணப் பொதிகளை எடுத்துச் செல்வதும் சில பயணிகள் தெரிந்தே மற்றவர்களது பயணப் பொதிகளை திருடிச்செல்வதும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு மாற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட பயணப்பொதிகள் மீண்டும் அடிக்கடி விமான நிலையத்திற்குத் திரும்புகின்ற நிலையில் அவைகளின் உரிமையாளர்களுக்கு வழங்குவது மிகவும் கடினமாக உள்ளது.

இதனை தடுக்கும் முகமாக இப் புதிய “டாக்” குறிச்சொற்கள் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 550 | 500 |
| உருளைக்கிழங்கு | 300 | 220 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1400 | 1000 |
| தக்காளி | 700 | 700 | 800 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 140 | 150 |
| கோவா | 400 | 350 | 480 | 500 |
| கரட் | 350 | 450 | 500 | 500 |
| பூசணி | 180 | 120 | 140 | 120 |
| புடோல் | 320 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 420 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 350 | 280 | 350 | 450 |
| பாகற்காய் | 700 | 500 | 600 | 800 |
| வெண்டக்காய் | 280 | 220 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 350 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 400 |
| பீற்றூட் | — | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 700 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 1800 | 1400 | 2000 |
| போஞ்சி | 350 | 400 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 400 | 480 |
| கீரை - 1 பிடி | 160 | 120 | 220 | 200 |
| தேசிக்காய் | 800 | 600 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | — | 400 |
| வெங்காயப்பூ | -- | — | — | — |
| முள்ளங்கி | 160 | 180 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | 80 |
| வல்லாரை | 100 | 35 | 60 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 100 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2987

செல்வி





சியாமளா




நிதுஜன்




சிவானு




கதில்




மேதினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் சூரிய கலங்களை பொருத்த திட்டம்

(கொழும்பு)


நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களை பொருத்தும் திட்டம் அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மினுவாங்கொடை கல்விப் பிரிவில் முன்னோடித் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் 20,000 ரூபாவுக்கு மேல் மின் கட்டணத்தை பெறும் பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தியை பெற்றுக் கொடுக்கும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# நடமாடும் நூலக சேவை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி நடமாடும் நூலக சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் வசிக்கும் புலம்பெயர் தமிழ்ப் பெண் ஒருவரின் நிதி அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்காக முச்சக்கரவண்டியொன்றில் நடமாடும் நூலகமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நடமாடும் நூலகத்தில் பாடசாலை மாணவர்கள் தமக்கு தேவையான நூல்களை பெற்று வாசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# மனித உரிமை தினத்தை முன்னிட்டு மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மன்னாரில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் அருந்தவநாதன் நிரோஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.





இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற அரச காணிகள் கொள்ளை தொடர்பாக நீதியை பெற்றுத் தாருங்கள், பணக்காரர்களுக்காக தாரை வார்க்கப்படும் மேய்ச்சல் தரைகள், கடற்கரையோரம், காட்டு நிலங்களை தடுத்து நிறுத்துங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (5-6-285)

# கல்மடுகுள நீர்மட்டம் 27.1 அடி உயர்வு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட கல்மடுகுளத்தின் நீர்மட்டமானது 26 அடியை தாண்டி 27.1 அடி ஆக உயர்ந்துள்ளது என நீர்ப்பாசன திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது பெய்து வரும் கடும் மழை காரணமாக குறித்த கல்மடுகுளத்தின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதோடு குளத்தின் மேலதிக உவரி நீர் 8" வெளியேற்றப்பட்டு வருவதால் நீர்நிலைகளுக்கு அருகில் வசிக்கும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (5-6-316)




# கிளிண்டனை தூதுவராக நியமியுங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்




(குருமன்காடு)

இலங்கையில் தமிழர்களின் போராட்டங்களுக்கு தீர்வு காணும் வகையில் கிளாரி கிளிண்டனை சிறப்புத்தூதராக நியமிக்க வேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் அமெரிக்க ஜனாதிபதி பைடனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனிதஉரிமைகள் தினமான நேற்றுமுன்தினம் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக குறித்த சங்கத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

சுயநிர்ணய உரிமையை அடைவதற்கும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தமிழர்களான நாம் அவசரமாக உதவிகளை நாடிநிற்கின்றோம்.

எனவே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் ஒரு நிலைப்பாட்டை எடுத்து எமது உரிமைகளை ஆதரிப்பது மிகவும் முக்கியமானது. எமக்கான பாதுகாப்பு, கண்ணியம், சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். (5-6)

# யாழில் அதிகரிக்கும் வழிப்பறிச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியை அண்டிய பகுதிகளில் இரவு வேளைகளில் வழிப்பறிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை வீதி - ஸ்ரான்லி வீதி ஆகிய இரு பிரதான வீதிகளும் சந்திக்கும் குறித்த சந்தியில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால், இருளில் மறைந்து இருந்து வீதியில் தனியாக மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் நபர்களை இலக்கு வைத்து வழிப்பறி கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த சம்பவங்களினால் இரவு வேளைகளில் பொதுமக்கள் வெளியே பயணிக்க அச்சப்படுகின்றனர். வழிப்பறி சம்பவங்களின் அதிகரிப்பை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (5-6-33)

# குருந்தூர் போராட்ட வழக்குத் தவணை

(நெளுக்குளம்)

குருந்தூர்மலை தொடர்பான வழக்கு ஒன்று நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

B1053 /2022 என்ற இலக்கமுடைய வழக்கு தொடர்ச்சியாக தவணைகள் வழங்கப்பட்டு இடம்பெற்று வந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை 29 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2024 அன்று வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (5-6-299)




நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்களினால் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் குறித்த போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக வவுனியா, மன்னார் அஞ்சல் அலுவலக ஊழியர்களும் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (படம்: ஜோசப்நயன்)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தின மஹோற்சவமானது எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருதியை திதியும் உத்தராட நட்சத்திரமும் கூடிய நண்பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

351





ருக்கிறது அதுவே போதும். இப்படிப்பட்ட கணவனைப் பெறுவதற்கு நான் எவ்வளவு தவம் செய்தேனோ?" என்றாள்.

இதைக்கேட்டுக் கந்தன் மாறன் உள்ளம் குழம்பிற்று. ஒன்றும் சொல்லத் தெரியாமல் சும்மா இருந்தான்.

"அதுபோனால் போகட்டும் நிலவறையில் எங்களைப் பார்த்த பிறகு என்ன செய்தீர்கள்?" என்று நந்தினி கேட்டாள்.

"தீவர்த்தி பிடித்து வந்த காவலன் வழிகாட்டிக் கொண்டு சென்றான். நான் தங்கள் நினைவாகவே கூடச் சென்றேன். இரகசிய மதில் சுவரைத் திறந்து விட்டுக் காவலன் நகர்ந்து கொண்டான். நான் அதில் நுழைந்தேன். உடனே முதுகில் யாரோ குத்தினார்கள், அவ்வளவுதான் நினைவிருக்கிறது. வந்தியத்தேவன் நான் அங்கு வருவேன் என்பதை எப்படியோ தெரிந்து கொண்டு வெளியில் காத்திருந்திருக்க வேண்டும்."

"இல்லை, ஐயா! தங்கள் ஊகம் மிகத்தவறானது. வெளியில் அவன் காத்திருக்கவே இல்லை."

"தாங்கள் கூட அவன் கட்சியில் சேர்ந்து விட்டீர்கள்?"

"நான் ஏன் அவன் கட்சியில் சேரவேண்டும்? எனக்கு என்ன லாபம்? அல்லது அவனுக்குத்தான் என்ன லாபம்? இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று எனக்கு இப்போது நிச்சயமாய்த் தெரிகிறது."

"சொல்லுங்கள், தேவி! எப்படியென்று சொல்லுங்கள்!"

"வந்தியத்தேவன் வெளியே காத்திருக்கவில்லை!."

"பின்னே யார் காத்திருந்தார்கள்?"

"வேறு யாரும் இல்லை வந்தியத்தேவன் வெளியில் காத்திருக்கவில்லை யென்றுதானே சொன்னேன்? அவன் அந்த பொக்கிஷ நிலவறைக்குள்ளேயேதான் காத்திருக்கிறான்!"

"என்ன? என்ன? அது எப்படி சாத்தியமாக முடியும், தேவி!"

"அவன் அன்று திடீரென்று மாயமாய் மறைந்து விட்டான். எப்படி மறைந்திருப்பான்? நீங்களே யோசித்துப் பாருங்கள்! எப்படியோ அவன் பொக்கிஷ நிலவறைக்குள் புகுந்து அவ்விடத்து இரகசியங்களையெல்லாம் அறிந்து கொண்டான். பின்னர், உங்களைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறான். கதவைத் திறந்ததும் தங்களைப் பின்னாலிருந்து குத்தித் தள்ளிவிட்டுத் தானும் வெளியேறியிருக்கிறான். அப்புறம் ஒரு வேளை அவன் மனச்சாட்சியே அவனை உறுத்தியிருக்கலாம். தங்களை அந்த ஊமையின் வீட்டில் கொண்டு போய்ப் போட்டு விட்டுப் போயிருக்கிறான்!"

"தேவி! தாங்கள் சொல்கிறபடிதான் நடந்திருக்க வேண்டும் சந்தேகமில்லை. இத்தனை நாளும் இது என் புத்திக்கும் எட்டவில்லை மற்றவர்களுக்கும் புலப்படவில்லை! இந்தச் சோழ நாட்டிலேயே மதி நுட்பம் அதிகம் உள்ளவர் யார் என்று கேட்டால், தாங்கள்தான் என்று நான் சொல்வேன். இந்த உலகத்தில் அறிவு படைத்தவர்கள் உண்டு அழகு படைத்தவர் உண்டு. இரண்டும் சேர்ந்துள்ளவர்களைப் பிரம்ம சிருஷ்டியில் காண்பது அபூர்வம். தங்களிடந்தான் அழகு, அறிவு, இரண்டும் பொருந்தியிருக்க காண்கிறேன்!" என்று பரவசமாகக் கூறினான் கந்தன்மாறன்.

"ஐயையோ! அப்படியா சொன்னேன்-? அதனால்தான் அவர் முகம் அப்படிச் சிவந்ததாக்கும்! இப்போது கூட அவருக்கு என்னைக் கண்டால் அவ்வளவாகப் பிடிக்கவில்லை"

நந்தினி சிரித்துவிட்டு, "உங்களை அவருக்குப் பிடிக்காவிட்டால் பாதகமில்லை உங்களுக்கு அவரைப் பிடித்திருக்கிறதல்லவா? அதுவே போதும்!" என்றாள்.

"தேவி! உண்மையைச் சொல்லுகிறேன். தங்களிடம் மறைப்பதில் பயன் என்ன? எனக்கும் அவரைப் பிடிக்கவில்லை" என்றான் கந்தன்மாறன்.

"அதனாலும் பாதகமில்லை! எனக்கு அவரைப் பிடித்தி

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்


# குழந்தையின் அழுகை

(நேற்றைய தொடர்ச்சி...)

"பீர்பால் ஏன் வரவில்லை? ஏதாவது தகவல் அனுப்பியிருக்கிறாரா?" என்று அக்பர் சபையோரைக் கேட்டார். உடனே, சபையில் ஒருவர் எழுந்து, "இல்லை, பிரபு!" என்றார். "தர்பாருக்கும் வரவில்லை, தகவலும் அனுப்பவில்லை. அவரை இங்கு அழைத்து வர ஆள் அனுப்புங்கள் என்று அக்பர் உத்தரவிட்டார். பீர்பாலை அழைத்து வரச் சென்ற ஆள் சிறிது நேரத்தில் திரும்பினான்.

"பிரபு! அவருடைய குழந்தை அழுது அடம் பிடிக் கிறதாம். அதை சமாதானப்படுத்திய பிறகு வருவதாகக் கூறினார்." என்றான் அவன். "என்ன திமிர் இருந்தால் பீர்பால் இப்படி ஒரு பதிலை அனுப்புவான். மிகவும் கெட்டிக்காரனான பீர்பாலுக்கு அழுகின்ற குழந்தையை சமாதானப்படுத்த முடியவில்லையா? இது நம்புகிற மாதிரி இல்லையே" என்றார் அக்பர்.

பிறகு கோபத்துடன், "பீர்பால் உடனே இங்கு ஆஜராக வேண்டும் என்று என் கட்டளையைத் தெரிவியுங்கள். அப்படியும் ஏதாவது



சமாதானம் கூறினால் அவரைக் கட்டியிழுத்து வாருங்கள்!" என்று பணியாளரிடம் உத்தரவிட்டார். அவர் கோபத்துடன் கட்டளைப் பிறப்பிக்கும் போதே, பீர்பால் அவசர அவசரமாக சபைக்குள் நுழைந்தார். பீர்பாலை தலையோடு கால்வரை அக்பர் உற்று நோக்கினார்.

"என்னை மன்னித்து விடுங்கள் பிரபு. என்னுடைய மூன்று வயதுக் குழந்தை காலையிலிருந்து தொடங்கி அடம்பிடித்து அழுது கொண்டேயிருக்கிறது. அதை என்னால் சமாதானப்படுத்தவே முடியவில்லை. அதனால்தான் என்னால் தர்பாருக்குக் குறித்த நேரத்தில் வர முடியவில்லை. என் குழந்தை இன்னமும் அழுது கொண்டேயிருக்கிறது." என்றார் பீர்பால்.

"உன்னால் ஒரு குழந்தையை சமாதானப்படுத்த முடியவில்லை என்பதை நான் நம்ப மாட்டேன்!" என்றார் அக்பர். "நான் நடந்ததைக் கூறுகிறேன். கேளுங்கள். காலையில் எழுந்தவுடன் என் குழந்தை கரும்பு கேட்டது. நானும் வாங்கித் தந்தேன். அதைப் பிழிந்து சாறு தரும்படிக் கேட்டது. நானும் அவ்வாறே செய்து ஒரு கோப்பையில் ஊற்றிக் கொடுத்தேன்.

உடனே கோப்பையிலிருந்த கரும்புச் சாற்றைத் தரையில் கொட்டிவிட்டு, தரையில் ஓடும் சாற்றை மீண்டும் கோப்பையில் எடுத்துத்தரச் சொல்லிப் பிடிவாதம் செய்தது. அது என்னால் எப்படி முடியும்? அது முடியாத காரியம் என்று சொன்னாலும் கேட்கவில்லை.

அதனால்தான் எனக்கு தாமதமாகி விட்டது!" என்று பீர்பால் பரிதாபமாகக் கூறினார். "ஒரு குழந்தையை சமாதானப்படுத்த சாமர்த்தியமற்ற உன்னைப் போய் பிரதம ஆலோசகனாக நியமித்துக் கொண்டேனே!" என்று அக்பர் விமர்சனம் செய்தார்.

"பிரபு! உலகிலேயே மிகக் கடினமான காரியம் அது ஒன்று தான். நீங்கள் எப்போதாவது அழும் குழந்தையை சமாதானம் செய்து இருக்கிறீர்களா?" என்று பீர்பால் கேட்டார். தொடர்ந்து, "எங்கே! சற்று முயற்சி செய்து பாருங்களேன். நான் இப்போது ஒரு குழந்தை போல் நடிக்கிறேன். நீங்கள் என்னை சிரிக்க வையுங்கள்" என்றார். அதற்கு அக்பரும் சம்மதித்தார்.

உடனே, பீர்பால் தரையில் படுத்துக் கொண்டு குழந்தையைப் போல் கை, கால்களை உதைத்துக் கொண்டு அழுவது போல் நடித்தார். அக்பரும் சிம்மாசனத்தில் இருந்து இறங்கி வந்து "அழாதே பாப்பா! உனக்கு என்ன வேண்டும்?" என்று கெஞ்சினார்.

"ஹூஹூ! எனக்கு தங்க மோதிரம் வேண்டும்!" என்று பீர்பால் குழந்தைக் குரலில் கேட்டார். உடனே, அக்பர் தன் விரலிலிருந்து மோதிரத்தைக் கழற்றி பீர்பாலின் விரலில் அணிவித்தார். ஆனால், மறுபடியும் பீர்பால் குழந்தையின் குரலில் உரக்க அழுதார்.

"எனக்கு ஒரு யானை வேண்டும்" என்று கத்த, அக்பர் உடனே ஒரு யானையை வரவழைக்கச் செய்தார். அதன்பிறகும், பீர்பால் கை, கால்களை உதைத்துக் கொண்டு அழுதார். "இந்த மோதிரத்தினுள் யானை நுழைந்து வெளியே வர வேண்டும்! ஹூஹூ!" என்று கத்தினார். தலையைப் பிடித்துக் கொண்ட அக்பர், "ஐயோ! உன்னை என்னால் சமாதானப்படுத்த முடியாது!" என்று கூற "இப்போதாவது புரிந்ததா பிரபு? அடம்பிடித்து அழும் குழந்தையை சமாதானம் செய்வது மிகவும் கடினம்" என்றார் பீர்பால்.

அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்த அக்பர், "பீர்பால்! நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை!" என்றார். பீர்பாலுக்குக் கிடைக்கப் போகும் தண்டனையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த அதிகாரிகளின் முகத்தில் அசடு வழிந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான நடத்தை என்பது கருணை நிறைந்த தன்மையாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொருட்களுக்கு கண்டபாட்டில் விலை சொல்லாதீர்கள்

செய்யும் தொழிலே தெய்வம் என்பது நம் தமிழ் முதுமொழி.

நாம் ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலைத் தெய்வமாகப் போற்ற வேண்டும். அவ்வாறு போற்ற வேண்டியதற்கான காரணங்கள் பல.

அதில் முக்கியமான காரணம் நாம் செய்கின்ற தொழிலை நம்பிப் பலர் இருக்கிறார்கள்.

ஆக, நம்பிக்கை என்று வந்துவிட்டால், அங்கு தெய்வத்துக்கு இணையான தகைமை ஏற்பட்டுள்ளதென்பது பொருள்.

அதனால்தான் செய்கின்ற தொழிலைத் தெய்வமாகப் போற்ற வேண்டும்.

இதற்கு நல்ல உதாரணமாக வர்த்தகத் தொழிலைக் குறிப்பிடலாம்.

ஆம், வர்த்தகத் தொழிலை நடத்துபவர்களிடம் பொதுமக்கள் சென்று தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வாறு பொருட்களைக் கொள்வனவு செய்கின்ற பொதுமக்களின் ஒரே நம்பிக்கை குறித்த வர்த்தக நிறுவனம் – குறித்த வர்த்தக நிறுவன உரிமையாளர் நம்பிக்கைக்கு விரோதமாக நடந்து கொள்ளமாட்டார் என்பதுதான்.

இங்குதான் ஆலயத்துக்குச் சென்று வணங்குவதற்குள் இருக்கக்கூடிய தத்துவம் சிந்திக்க பாலது.

அதாவது தெய்வ நம்பிக்கையின் அடிப்படையே ஆலய நிர்மாணிப்பு முதல் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள், விரதம் நேர்த்தி என அத்தனையுமாகும்.

ஆம், தெய்வத்தின் மீது கொண்ட நம்பிக்கையின் அடித்தளத்தில்தான் கோயிலும் கோபுரமும் எழுந்து நிற்கின்றன.

இங்குதான் செய்யும் தொழிலே தெய்வம் என்பதன் அர்த்தம் புரிதற்குரியது.

ஆம், தெய்வ நம்பிக்கையில் ஆலயங்களுக்கு அடியார்கள் செல்வதுபோல, வர்த்தகர்கள் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாடிக்கையாளர்கள் பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவுக்காக வர்த்தக நிறுவனங்களுக்குச் செல்கின்றனர்.

இங்கு வர்த்தகர்கள் நம்பிக்கைக்கு அநீதியாக நடந்தால், அது மிகப்பெரும் பாவச் செயலாகும்.

எனினும் சமகாலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின்பாக, வர்த்தகர்கள் பொருட்களுக்குக் கண்டபாட்டில் விலை சொல்கிறார்கள்.

அதுதான் விலை என்று நம்பி அந்தப் பொருட்களைக் கொள்வனவு செய்தால், இன்னொரு கடையில் அதேபொருள் மிகக் குறைந்த விலையில் இருப்பது தெரியவருகிறது.

இங்குதான் அதிகூடிய விலையில் பொருட்களை வாங்கியவர்கள் மனதால் வேதனைப் படுகின்றனர்.

உண்மை. பொருளாதார நெருக்கடிக்குப் பின்பாக நாட்டில் பொருட்களின் விலைகளுக்கு கட்டுப்பாடு இல்லை என்ற நிலை வந்துவிட்டது.

வர்த்தகர்கள் என்ன விலை சொல்கிறார்களோ அதுதான் விலை என்றால் அதை விட்ட அநியாயம் வேறு எதுவுமாக இருக்க மாட்டாது.

ஆகையால் தங்கள் மீது நம்பிக்கை வைத்து தமது வர்த்தக நிலையத்துக்கு வருகின்ற பொதுமக்களுக்கு நீதியான விலையில் பொருட்கள் வழங்கப்படுவதை வர்த்தக உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும். அதுதான் தர்மம். அதைத்தான் செய்யும் தொழிலே தெய்வம் என்பர்.

## அதிகரித்துவரும் குற்றச் செயல்களையடுத்து நாட்டிலுள்ள முழு மக்களையும் பதிவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

அதிகரித்து வரும் குற்றச் செயல்களை அடுத்து இலங்கையின் முழு மக்களும் பொலிஸில் பதிவு செய்யப்பட உள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ்ச் சமூகம் குறிப்பாக கொழும்பில் உள்ளவர்கள் பொலிஸாரால் பதிவு செய்யப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த இனத்தவர் என்பதை பொருட்படுத்தாமல் முழு மக்களையும் பதிவு செய்ய முடிவு செய்துள்ளோம்.

மூன்று மொழி களிலும் அச்சிடப்பட்ட பதிவு படிவங்கள் விநியோகிக்கப் படுவதை நான் பார்க்கிறேன்.

எவரையும் எந்த நேரத்திலும் அடையாளம் காணக்கூடிய வகையில் இலங்கை மக்கள்தொகையின் இணையத் தரவுத் தளத்தை நாங்கள் உருவாக்குவோம் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீட மாணவ ஒன்றிய தலைவரிடம் விசாரணை

யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவரும் ஊடகவியலாளருமான இராசரத்தினம் தர்ஷனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து நேற்று சுமார் 4 மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

• இவ்விசாரணை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 2.30 வரை தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்தபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் பாடல் இசைக்கப்பட்டமை மற்றும் மாணவர் ஒன்றிய செயற்பாடுகள், மாணவர் ஒன்றியம் நடத்திய ஊடக சந்திப்புகள் தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## விவாகரத்து பெறுவதை இலகுவாக்க சட்டமூலங்கள்

### நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச

விவாகரத்து பெறுவதை இலகுவாக்கும் மூன்று புதிய சட்டமூலங்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதன்படி, திருமண காரணங்கள் சட்டம், வெளிநாட்டு விவாகரத்து தீர்ப்புகளை அங்கீகரிக்கும் சட்டம் மற்றும் சிவில் நடைமுறை விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது விவாகரத்து பெறுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் காலாவதியான சட்டங்கள் தீவிரமாக சீர்திருத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது விவாகரத்து கோரும் நபர், மூன்றாம் தரப்பினருடன் தொடர்பு, தீங்கிழைக்கும் விலகல் அல்லது ஆண்மைக் குறைவு ஆகிய மூன்று உண்மைகளில் ஒன்றை நீதிமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.

அந்த உண்மைகளை நிரூபிக்கும் பொறுப்பு விவாகரத்து கோருபவர் மீது உள்ளது என்றும், இதுபோன்ற காரணங்களை நிரூபிப்பது மிகவும் கடினம் என்றும் சில விவாகரத்து வழக்குகள் 10 முதல் 20 ஆண்டு கள் வரை இழுபறியாக உள்ளதாகவும், விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதில் இந்த உண்மைகள் பரிசீலிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **புதன்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** புற்றுநோய் மருத்துவமனை தெல்லிப்பழை, மருத்துவமனை வீதி (பலாலி) ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** மணவாழப்பட்டு முறிப்பு, சின்ன சாளம்பன் (14ஆவது மைல் கல்) ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## சீரற்ற காலநிலை காரணமாக 3 பாடசாலைகளுக்கு பூட்டு

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக ஹல்துமுல்ல பிரதேசத்தில் மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பண்டாரவளை வலயக் கல்விப் பணிப்பாளர் தம்மிக்க ஹேரத்தின் பணிப்புரைக்கு அமைவாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக் தெரிவிக்கப்படுகின்றன.

கட்டிடம் இடிந்து விழும் அபாயம் காரணமாக மூடப்பட்ட பிளாக்வுட் பாடசாலை மாணவிகளை ஹல்துமுல்ல தமிழ் உயர்தர பாடசாலைக்கும், மலடோல பாடசாலை மாணவிகளை ஹரன்காவ பாடசாலைக்கும் அனுப்பிவைத்து கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார். (ம-7)

## அரச மற்றும் மாகாண தொழிற் சங்க கூட்டமைப்பு சுகயீன விடுமுறை போராட்டம்

நாடளாவிய ரீதியில் இன்றையதினம் சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுப்ப தற்கு, அரச மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்ச கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு கோரி அந்த தொழிற்சங்கத்தினர் குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அத்துடன், பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், இன்று முன்னெடுக்கப்படவுள்ள சுகயீன விடுமுறை போராட்டத்தில் நோயாளர் பராமரிப்பு சேவையாளர்கள், கல்விப் பணியாளர்கள் மற்றும் போக்குவரத்து துறை ஊழியர்கள் ஆகியோர் இணையமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



11

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

குறித்த சந்தேகநபர் இன்று 08.03.2023 ஆம் திகதி கல்முனை தனியார் பேருந்து நிலையத்தில் வைத்து 200/= ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்றுக் கொண்ட போதே கைது செய்யப் பட்டுள்ளார்.

9. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப் பாட்டுக்கு அமைய கதிர்காமம் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் தனமல்வில பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றும் பீட்வன உத்தியோகத்தர் ஒருவரை 185,000/- ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் 2023.02.15 ஆம்திகதி கைது செய்துள்ளனர்.

முறைப்பாட்டாளரின் காணியை அண்மித்த காணி வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமானது என பொலிஸாருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும், முறைப் பாட்டாளரை குறித்த காணியில் வசிக்க அனுமதிப்பதற்காகவும் குறித்த சந்தேகநபர் 200,000/- ரூபா இலஞ்சம் கோரியுள்ளதுடன், முதலில் 15,000/- ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளார்.

பின்னர் மீதி 185,000 ரூபாவை முறைப்பாட்டாளரின் வீட்டிற்கு முன்பாக உள்ள வீதியில் (லுனுகம - கதிர்காமம் - ஆதி 100 வீதியில்) வைத்து பெற்றுக் கொண்ட போது சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

10. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப் பாட்டுக்கு அமைய, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் கடமையாற்றும் மருந்தாளர் ஒருவரை ரூ 21,000/- இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச் சாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் 2023.02.15 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

மஹரகம அபேக்ஷா வைத்திய சாலையில் மருந்தாளராக கடமை யாற்றும் சந்தேகநபர், அரசினால் வழங்கப்படும் மருந்துகளையும் மற்றும் வைத்தியசாலைக்கு நன் கொடையாக பெறப்பட்ட அரிதான மருந்துகளையும் முறைப்பாட்டாள ருக்கு வழங்குவதற்காக ரூ 22,000 இலஞ்சம் கோரியுள்ளதுடன், மஹரகம றோயல் கல்லூரிக்கு அருகாமையில் வைத்து மேற்படி தொகையில் இருந்து 21,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டுள்ளார்.

11. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய ரூ. 22,000/- இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கட்டடத் திணைக்களத்தில் கடமையாற்றும் ஆரம்பநிலை அரை-தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும், குடிவரவு - குடியகல்வுத் திணைக் களத்தில் கடமையாற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்து தல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் 2023.02.16 ஆம் திகதி கைது செய்துள்ளனர். மற்றும் லொத்தர் விற்பனையாளர் ஒருவரும், ஏயர்ரெல் சிம் விற்பனையாளர் ஒருவரும் மேற்குறிப்பிட்ட இலஞ்சத்தை பெறுவதற்கு உதவியமை மற்றும் உடந்தையாக இருந்தமைக் காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு - குடியகல்வுத் திணைக் களத்தில் இணையவழி முறையில் முன் திகதி மற்றும் நேரத்தை ஒதுக்காமல் ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினை தயாரிப்பதற்கு இலஞ்சம் கோரிய சந்தேக நபர்களில் ஒருவரான ஆரம்பநிலை அரை-தொழில்நுட்ப உத்தியோகத்தர் பத்தரமுல்லை இலங்கை வங்கிக்கு முன்பாக வைத்து 22,000/- ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார். மற்ற சந்தேக நபரான அலுவலக உதவியாளர் குடிவரவு - குடியகல்வுத் திணைக் கள அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், ஏனைய இரண்டு சந்தேகநபர்களும் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்பாக வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர்.

12. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய ரூ 10,000/- இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட் டின் அடிப்படையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் கடமையாற்றும் இரண்டு விசாரணை உத்தியோகத்தர்களை 2023.02.09 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்து தல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

முறைப்பாட்டாளர் கடமையாற் றும் ஜீவக ஹெர்பல் (வரையறுக் கப்பட்ட தனியார்) நிறுவனத்தின் ஊதுபத்தி பொதியில் குறிப்பிடப்பட் டுள்ள விலை மாற்றம் தொடர்பில் பொலநறுவை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் விசாரணை அதிகாரிகள் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண் டுள்ளார்கள் அதன்போது, ஜீவக ஹெர்பல் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கும், பொலநறுவை பிரதேசத்தில் உள்ள கடைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதுபத்தி பொருட்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கும், மேற்குறிப்பிட்ட பொருட்களை உற்பத் திப் பொருட்களாக ஏற்றுக்கொள்வ தற்கும் ரூ 10,000 இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட போது சந்தேக நபர்கள் பொலன்னறுவை, புதிய நகர் மக்கள் வங்கிக்கு முன்பாக வைத்து கைது செய்யப்பட்டனர்.

13. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, பொலநறுவை காவற் றுறை தலைமையக குற்றப்புலனாய் வுப் பிரிவில் கடமையாற்றும் காவற் றுறை சார்ஜன்ட் ஒருவரை ரூ10,000/- இலஞ்சம் கோரிப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில்2023.02.08 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

முறைப்பாட்டாளரின் சட்டவிரோத மான முறையில் மேற்கொள்ளப்ப டும் இறைச்சிக் கூடம் மற்றும் மாட்டிறைச்சி வியாபாரம் தொடர்பில் முறைப்பாட்டாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிப்பதற் காக ரூ10,000 இலஞ்சம் பெற்ற போதே கதுருவெல பழைய இலங்கை வங் கிக்கு அருகில் வைத்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

14. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மதவாச்சி காவற்றுறை நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை 350,000/- ரூபா இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் 2023.01.31 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மற்ற தரப்பினருடன் பேச்சுவார்த்தை செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை முறைப்பாட்டாள ருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வல்லுறவு தொடர்பில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் இருந்து முறைப்பாட்டாளரை விடுவிப்பதற் கும், மேற்படி வழக்குகள் தொடர் பில் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக ளுக்கு அமைய அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்துவதைத் தவிப்பதற்கா கவும் ரூ 350,000/- இலஞ்சம் பெற்ற போதே சந்தேகநபர் மதவாச்சி, கொனகம்புக்கொல்லாவயில் உள்ள முறைப்பாட்டாளரின் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

15. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட் டுக்கு அமைய யாழ்ப்பாணம் தலைமையகக் காவற்துறை நிலையத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ் டபிள் ஒருவரை 1 மில்லியன் ரூபா இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் 17.01.2023 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்து தல்களை புலனாய்வு செய்வதற் கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

முறைப்பாட்டாளருக்கு எதிராக பிரதேச விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் முறைப்பாட்டாள ருக்கு ஆதரவாக செயற்படுவதற் காக 1 மில்லியன் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட போதே குறித்த சந்தேகநபர் யாழ்ப் பாணம் சந்தான வாரச் சந்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

16. 2023.01.13 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய் வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய 2 மில்லியன் ரூபா இலஞ் சம் கோரிப் பெற்றுக்கொண்ட குற் றச்சாட்டின் அடிப்படையில் மாவ னல்ல பிரதேச சபையின் தவிசா ளரையும் மற்றும் அங்கு கடமை யாற்றும் சாரதி ஒருவரையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய் வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுவேலியில்...

பும் அரைப்பவுண்மோதிரமும்கொள்ளை யடித்துச் செல்லப்பட்டதாக அச்சு வேலி பொலிஸார் தெரிவித்தனர்.

தனிமையில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பெண் அணிந்திருந்த நகைகளை பறிக்க முயன்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது மழைக்கவச அங்கி மூலம் உடலை முற்றாக மூடி முச்சக் கரவண்டியொன்றில் வந்த மர்ம நப ரொருவர் பெண்ணை தாக்கிய நிலை யில் இருவரும் பெண் அணிந்திருந்த நகைகளை பறித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## வற் வரி...

அது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று பாராளுமன்றில் நடத்தப்பட்ட நிலையில், குறித்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 98 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய, தற்போது 15 சதவீத மாக அறவிடப்படும் வற் வரியானது எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 18 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

வற் வரி திருத்தச் சட்டமூலம் தொடர் பில், நேற்றைய தினம் விவாதித்து அது குறித்த வாக்கெடுப்பை நடத்துவதற்கு நேற்றுக் காலை தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு பெரும்பாலான பாராளு மன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் ஆதரவளித்திருந்தனர்.

எனினும், குறித்த சட்டமூலம் மீதான விவாதம் இடம்பெறுவதற்கு முன்னர், வாக்கெடுப்புக்கு விடப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கிளிநொச்சியில்...

வில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் இராமநாதபுரம் கல்மடுநகர் பகுதியைச் சேர்ந்த கனகரத்தினம் கோசிகன் (வயது-33) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந் துள்ளார்.

இது தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,316)

## வற் வரி உயர்...

கிறது.

இது எதிர்வரும் ஜனவரி முதல் 63 ரூபாயால் அதிகரிக்கப்படும் என்று விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந் தனைகளுக்கு அமைய விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளில் பயன் படுத்தப்படும் உபகரணங்கள் கூட இந்த வற் (VAT) வரிக்கு உட்படுத்தப் படும் என்றும் விஜித ஹேரத் சுட்டிக் காட்டி யுள்ளார்.

நாட்டில் கடற்றொழில் துறை ஏற் கெனவே சீர்குலைந்துள்ளது.

இந்தநிலையில் 18 வீத வற் வரியை அமுல்படுத்துவதன் மூலம் கடற்றொழி லாளர்களின் வாழ்வாதாரம் அவலத் திற்கு உள்ளாகும் எனவும் பாராளு மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (ம-7)

## புலிகளின்...

சின்னத்தை ஸ்ரிக்கராக முச்சக்கர வண்டியில் ஒட்டிவைத்த சாரதி ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை கந்தேநுவர பிரதே சத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் கந்தே நுவர பொலிஸார் தெரிவிக்கையில், கைது செய்யப்பட்ட நபர் ஜா எல பிர தேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பணியாற்றியவர் ஆவார்.

குறித்த நபர் விடுமுறைக்காக மாத் தளையில் உள்ள தனது வீட்டிற்கு வந்திருந்த நிலையிலேயே கைது செய் யப்பட்டுள்ளார்" என்றனர். (ம்-7)

## மத ஸ்தலங்களை...

அலுவல்கள் அமைச்சர் விதுர விக் கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சேகரிக்கப்படும் தகவல்கள் டிஜிட் டல் மயமாக்கல் மூலம் புதுப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ம-7)

## சிற்றுண்டிகள்...

தெரிவித்துள்ளது.

முட்டை, இறைச்சி, மீன், சீனி மற் றும் கீரி சம்பா அரிசி போன்றவற்றின் விலைகள் அதிகரித்ததன் காரண மாகவே இந்த விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உணவுப் பொருட் களின் விலை [illegible] கப்படும் என்பது குறித்து இறுதித் தீர் மானம் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பெரும்பாலான உண வகங்களில் உணவுக்கான விலை உயர்த் தப்பட்டுள்ளது காட்சிப்படுத்தப்பட் டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-7)

## இனப் பிரச்சினை...

கொள்வது என உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ் எம்.பிக்களுக்கிடையி லான சந்திப்பில் கலந்துரையாடப்பட் டது.

உலகத் தமிழர் பேரவையினருக் கும் தமிழ் எம்.பிக்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பானது நேற்று கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் களான சுமந்திரன், ரவூப் ஹக்கீம், சாணக்கியன், சம்பந்தன், ஜீவன் தொண்டமான் மற்றும் பௌத்த தேரர்களும் கல ந்து கொண்டனர்.

இக்கலந்துரை யாடலில் இனப் பிரச்சினைக்கான தீர்வு, ஒன்றிணை ந்த இலங்கைக் குள் எவ்வாறு சமூகங்களை கட்டியெழுப்பல், அதிகாரப் பகிர்வு போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப் பட்டன. (ம-7)

## ரணி...

கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்துக் குறிப் பிடுகையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

இது தொடர் பாக அவர் தொட ர்ந்து குறிப்பிடு கையில்,

ஒரு சில பொய் செய்திகளை பிர சாரப்படுத் தி வரும் நிறுவனங் கள் ஒன்றிணை ந்து அரசாங்கத் திடமிருந்து தர குப்பணம் பெற் றுக் கொண்டு, ரணிலும் சஜித் தும் இணையப் போவதாக பிர சாரம் செய்து வரு கின்றன.

இது உண் மைக்கு புறம் பான செய்தி. ரணிலும் சஜித் தும் ஒருபோதும் இணையப்போவ தில்லை என்ற இந்த செய்தியை இந்தச் சபையில் தெரிவித் துக் கொள்கிறேன்.

எனவே அர சாங்கத்திடமிரு ந்து பணம் பெற் றுக்கொண்டு இவ்வாறான அப்பட்ட மான பொய்ப் பிரசாரங்களை மேற் கொள்ள வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-7)

# கந்தகாட்டில் பலர் மாயம்

(கொழும்பு)

வெலிகந்த, கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்து கைதிகள் குழு ஒன்று தப்பிச் சென்றுள்ளதாகவும், அந்த குழுவை கண்டுபிடிக்க சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

சுமார் 50 கைதிகள் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக முதலில் தெரிவிக்கப் பட்டாலும், 15 கைதிகள் பொலிஸா ரால் மீண்டும்கைது செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18204)

**077 468 3354, 076 755 8606**


# காணவில்லை



9 ஆம் வட்டாரம் வல்லன் புங்குடுதீவை வசிப்பிடமாக கொண்ட சோதிநாதர் யோகலச்சுமி (யோகம்) 45 நாட்களாக காணவில்லை.

இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 532 4349**
**077 833 5879**

சோ.அரியரட்ணம்
இல.208, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(18196)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01 - 05 - 1999

மறைவு 29 - 10 - 2023

## அமரர் உதயகுமார் உஷாந்தன்

"வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்டமுழுவதும் தருவோய் நீ"
நீவீர் உம் இயல்பான புன்னகையில் எம்மை வசமாக்கி
எம் சுற்றத்தில் எம்மை சுற்றி வரும் செயல் வழி வீரன்!
எமது செல்வப்புதல்வன் எம்முடன் வாழ்ந்தகாலம்
குறுகியதாயினும் வாழ்ந்த காலம் நீள நினைதலுக்குரியன
காலன் தன் வசமாகி மாலோடயனறியா இளம்பிறையாளன்
தாடலை பதித்து இன்றுடன் 45 தினங்கள் ஆகின.
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(C-7876)

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

077 916 2852
077 007 1128

பேரன் நா.கந்தையா(கனடா)
தகப்பன் கி.உதயகுமார்
குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18185)

**076 825 7716** (ஆகாஸ்)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127


# தொலைபேசி தவறிவிட்டது

05.12.2023 செவ்வாய்க்கிழமை மாலை
4.20 - 4.35 இற்கும் இடையில்
(Samsung) தொலைபேசி யாழ் வேம்படி
வீதியில் தவறிவிட்டது.
தொடர்பு :
**076 761 0023**

(18191)


## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
**077 038 5584**

(18168)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-7874)

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி, கொடிகாமம், பூநகரியில் உள்ள பாற்சாலைக்கு வேலையாட்கள் தேவை.
- பகுதிநேர வேலை வாய்ப்பும் உண்டு.
- Whatsapp இல் சுயவிபரக்கோவை அனுப்ப முடியும்.

(18194)

**077 664 8732**



## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7874)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS


# மரண அறிவித்தல்



தோற்றம் 1934 - 04 - 16

மறைவு 2023 - 12 - 11

## கந்தையா அன்னபூரணம்

சட்டநாதர் வீதி நல்லூர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னபூரணம் அவர்கள் நேற்று 11.12.2023 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா, நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலராணி, பாலசுப்பிரமணியம்(ஓய்வுநிலை உத்தியோகத்தர் -யாழ் மாநகர சபை), காலஞ்சென்ற பராசக்தி(ஓய்வுநிலை - அதிபர்), பாலச்சந்திரன்(லண்டன்), பாலசிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வதனி, சிவகுமார்(கூட்டுறவாளர், சிவபூமி திருவாசக அரண்மனை - நாவற்குழி), சிவபாலினி, பூபா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெசிந்தன்(HNB - மல்லாவி), மாதுளா, மதுசனா, நிதுசன்(களனி பல்கலைக்கழக மாணவன்), ஜெனோஷா(ஆசிரியை - முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), சயந், சுஜன், அக்கினா, அஜித், சிந்தியா, சரவணபவன், இந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஷ்மிகா, சாதனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12.12.2023 செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

98/1, சட்டநாதர்,
வீதி, நல்லூர்.

077 656 7363
077 329 8114

(C-7875)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org